இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 19-08-2025

# பிரதமர் மோடியின் தந்திர உரை!

**பதினோரு ஆண்டுகள் ஆனபிறகும் வார்த்தைகளில் 'வடை' சுட்டுக் கொண்டுதான் இருக்கிறார் பிரதமர் மோடி. சொல்லிக் கொள்ளும் அளவுக்கு அவருக்குச் சாதனைகள் இல்லை. அதனால் அதனை அவரால் சொல்ல முடியவில்லை. வெறும் வாயை மென்று கொண்டு இருக்கிறார்.**

79 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் வகையில் செங்கோட்டையில் கொடியேற்றி வைத்துவிட்டு அவர் ஆற்றிய உரையானது, எந்தச் சாதனைகளையும் சொல்வதாக அமையவில்லை. பத்து ஆண்டுகளாகச் சொல்லி வரும் தற்சார்பு, உள்நாட்டு உற்பத்தி ஆகியவற்றைத்தான் மீண்டும் மீண்டும் அளந்து விட்டிருக்கிறார். இதையே இன்னும் எத்தனை ஆண்டுகளுக்குச் சொல்லப் போகிறார் எனத் தெரியவில்லை.

"பாதுகாப்பு, எரிசக்தி, நவீன தொழில்நுட்பம், மருந்து தயாரிப்பு, உரத் தயாரிப்பு ஆகிய அனைத்துத் துறைகளிலும் உள்நாட்டு உற்பத்திக்கு முன்னுரிமை அளிக்கப்படும். உலக அளவில் பொருளாதார சுயநலம் நிலவும் சூழலில் தற்சார்பை உறுதி செய்வது காலத்தின் கட்டாயம் ஆகும். போர் விமானங்கள், இயந்திரங்கள் தொடங்கி சமூக ஊடகம் வரை இந்தியாவில் உருவாக்கப்பட வேண்டும். வளர்ந்த இந்தியாவுக்கு வலுவான அடித்தளம் தற்சார்பு. நாட்டின் சுயமரியாதைக்கும் இதுவே அடிப்படை. ஒரு நாடு எந்தளவுக்கு பிறநாடுகளைச் சார்ந்துள்ளதோ அந்த அளவு அதன் சுதந்திரம் கேள்விக்கு உள்ளாகும்" என்றெல்லாம் முழங்கி இருக்கிறார் பிரதமர் மோடி. இதைத்தான் பல ஆண்டுகளாக அவர் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

மக்கள் மறந்திருப்பார்கள் என்று பிரதமர் மோடி நினைத்திருக்கலாம். அவர் முதன்முதலாக பிரதமர் ஆன 2014 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 அன்று செங்கோட்டையில் கொடியேற்றி விட்டு பேசும் போது சொன்னது என்ன? **'மேக் இன் இந்தியா'**. அதையே தான் இப்போது **'தற்சார்பு இந்தியா'** என்று வார்த்தையை மாற்றி இருக்கிறார் பிரதமர்.

**'மேக் இன் இந்தியா' திட்டம் பெரும் தோல்வியை அடைந்ததைத் தான் பார்க்கிறோம். முதல் ஆறு ஆண்டுகளில் இந்தத் திட்டம் எந்த நகர்வையும் தராமல் தோல்வியை அடைந்தது என்பதுதான் உண்மை. 'எல்லோரும் இந்தியாவுக்கு வந்து முதலீடு செய்யுங்கள்' என்று உலக நிறுவனங்களுக்கு அழைப்பு விடுத்தார் பிரதமர். பெரிய அளவில் முதலீடுகள் எதுவும் வரவில்லை. வந்தவர்களும் லாபம் சம்பாதித்து எடுத்துச் சென்று விட்டார்கள். 'இந்தியாவில் தயாரிப்போம் என்ற திட்டமானது இந்தியாவில் இருந்து எடுத்துச் செல்வோம் திட்டமாகி விட்டது' என்று பலராலும் கிண்டல் செய்யப்பட்டதுதான் மிச்சம். அனைத்து தொழில்களுக்கும் முன்னுரிமை தருவோம் என்றார். அதனாலேயே இது கவனம் பெறவில்லை.**

'மேக் இன் இந்தியா' திட்டத்தை 'தற்சார்பு இந்தியா' என்று வேறு பேர் வைக்க முயற்சித்தார் பிரதமர்.

2020 ஆம் ஆண்டு கொடியேற்றிப் பேசிய பிரதர் மோடி, "தற்சார்பு இந்தியா என்பது 130 கோடி இந்தியர்களின் மந்திரச் சொல்லாக மாறி உள்ளது" என்றார் மோடி.

'தற்சார்பு இந்தியாதான் முக்கியம்' என்று 2021 ஆம் ஆண்டும் சொன்னார் பிரதமர் மோடி. அவர்கள், அவர்களுக்கு மட்டும் புரியும் வகையில், 'ஆத்மநிர்பார் பாரத்' என்று சொல்லிக் கொண்டார்கள். இப்படிச் சொல்லி விட்டால் யாருக்கும் அதனை விளக்கத் தேவையில்லை. செய்தோமா இல்லையா என்று நிரூபிக்கவும் தேவையில்லை. 'லோக்கல் ஃபார் லோக்கல்' என்றும் 2021 ஆம் ஆண்டு சொன்னார் பிரதமர் மோடி. உள்நாட்டில் உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு விற்பனை செய்வது ஒன்றையே தனது நோக்கமாகச் சொல்லி வந்தார் பிரதமர். பா.ஜ.க. அமைச்சரவையில் இருக்கும் அத்தனை அமைச்சர்களும் 'தற்சார்பு இந்தியாவின்' பி.ஆர்.ஓ.க்கள் போல பேசி வந்தார்கள்.

**'மேக் இன் இந்தியா' திட்டத்தில் 25 தொழில்களைச் சொன்னார்கள். இப்போது 'தற்சார்பு இந்தியா' திட்டத்தில் 5 திட்டங்களுக்குள் சுருக்கிக் கொண்டார்கள். மருந்து, மின்னணு, உணவு, வாகனம் ஆகியவற்றில் தற்சார்பு இருந்தால் போதும் என்று தங்களைத் தாங்களே மனதைத் திடப்படுத்திக் கொண்டார்கள். இதுதான் வளர்ச்சியா?**

'பொருளாதார' நோக்கத்துக்காக பா.ஜ.க. இதனைச் சொல்வதாகத் தெரியவில்லை. ஆர்.எஸ்.எஸ். பிதாமகர்கள் தேசியவாதம்' என்ற சொல்லை அடிக்கடி சொல்வார்கள். அத்தகைய தேசியவாதக் கொள்கையை பொருளாதாரத்தில் பயன்படுத்தத் துடிக்கிறார்கள் போலும். 2021 ஆம் ஆண்டு பிரதமர் மோடி இதனை அறிவிப்பதற்கு முன்னால் ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் இந்தக் கருத்தைச் சொன்னார். 'நாம் அனைத்திலும் தன்னிறைவு பெற வேண்டும். எந்த நாட்டையும் நம்பி இருக்கக் கூடாது' என்று சொன்னார். அதன் பிறகு மோடியும் இதனைச் சொல்லத் தொடங்கினார்.

அமெரிக்காவால் வர்த்தக ரீதியிலும் நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கும் பிரதமர் மோடி, தனது முகத்தைக் காப்பாற்றிக் கொள்ள 'தற்சார்பு' வார்த்தையைச் சொல்கிறார். அதன் மூலமாக சமாளிக்க நினைக்கிறார். அமெரிக்காவுக்கான உண்மையான பதில் இது அல்ல.

**'தாராளமயமாக்கல்'தான் சிறந்த வழி என்று சொன்னவர்கள், இப்போது 'தற்சார்பு'தான் சிறந்த வழி என்கிறார்கள். மொத்தத்தில் இவர்களுக்கு பொருளாதாரம் தெரியவில்லை என்றே தெரிகிறது. தங்களது அரசியல் பலவீனத்தை பொருளாதாரத்தின் மீது போட்டு மறைக்கப் பார்க்கிறார்கள். அதுதான் தெரிகிறது. பிரதமர் மோடியின் ஒவ்வொரு சுதந்திர நாள் உரையும் தந்திர உரையாக இருப்பதற்கு இதுதான் காரணம்.**

●●

### விவசாயிகள் இணைய வழியில் விண்ணப்பித்த அன்றே

# தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள் வாயிலாக பயிர்க்கடன் வழங்கும் திட்டம்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**தருமபுரி, ஆக. 19- தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.8.2025) தருமபுரி மாவட்டம், அதியமான்கோட்டையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் விண்ணப்பித்த அன்றே பயிர்க்கடன் வழங்கும் புதிய திட்டத்தை துவக்கிவைத்தார். இந்த திட்டமானது நாட்டிற்கே முன்னோடியான திட்டம் ஆகும்.**

2025-26-ஆம் ஆண்டிற்கான கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின் போது கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் "தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் விண்ணப்பித்த அன்றே பயிர்க்கடன் வழங்கப்படும்" என்ற அறிவிப்பை வெளியிட்டார்.

விவசாயப் பெருங்குடி மக்கள் பயிர்க்கடன் பெறுவதற்கு தொடர்புடைய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு நேரடியாகச் சென்று விண்ணப்பித்து, ஒரு வார காலத்திற்குள் அக்கடனைப் பெறும் நடைமுறையே தற்பொழுது நடைமுறையில் இருந்து வருகிறது.

இந்நடைமுறையில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு, இணையவழியில் (Online) பயிர்க்கடன் விண்ணப்பிக்கும் நடைமுறையும், விண்ணப்பித்த அன்றே விவசாயிகளின் வங்கிக் கணக்கில் பயிர்க்கடனை நேரடியாக வழங்கும் நடைமுறையும் தருமபுரி மாவட்டத்தில் முன்னோடி திட்டமாக (Pilot) செயல்படுத்தப்பட்டு, பின்னர் தமிழ்நாடு முழுவதும் விரிவுபடுத்தப்படும். மேற்கண்ட அறிவிப்பினை நிறைவேற்றும் விதமாக முதற்கட்டமாக தருமபுரி மாவட்டத்தில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களை சேர்ந்த உறுப்பினர்கள் இணைய வழியில் விண்ணப்பித்த அன்றே பயிர்க்கடன் வழங்கும் திட்டம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் தங்களுக்கு அருகில் உள்ள பொது சேவை மையத்திலோ, இணைய வழியிலோ தங்களது தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்க உறுப்பினர் எண் அல்லது மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி சேமிப்பு கணக்கு எண்ணைக் கொண்டு பயிர்க்கடன் விண்ணப்பிக்கும் மிக எளிமையான முறை உருவாக்கப்பட்டுள்ளது. விவசாயிகளின் நில உடைமை தொடர்பான விவரங்கள் வருவாய்த் துறையிடம் இருந்தும் பயிர்சாகுபடி தொடர்பான விவரங்கள் வேளாண் துறையிடம் இருந்தும் இணைய வழியில் பெற்று விண்ணப்பத்துடன் இணைத்து, சம்மந்தப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு இணைய வழியில் அனுப்பப்படும்.

சம்மந்தப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் செயலாளர், மத்திய கூட்டுறவு வங்கியின் கள மேலாளர் மற்றும் கிளை மேலாளர் தங்கள் கணினி வழியே விவசாயிகள் குறித்த விவரங்களை சரிபார்த்து கடன் தொகையை அன்றைய தினமே விவசாயிகளின் வங்கி கணக்கில் வரவு வைப்பர்.

இத்திட்டத்தை துவக்கி வைப்பதன் அடையாளமாக இன்று தருமபுரி மாவட்டம் அதியமான் கோட்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் மற்றும் பாலஜங்கமனஅள்ளி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தைச் சார்ந்த 5 விவசாயிகளுக்கு முதல்வர் அவர்களால் வட்டியில்லாத விவசாயக் கடன் வழங்கப்பட்டது.

இத்திட்டம் நடப்பாண்டிலேயே விரைவில் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும். இணையவழியில் கடன் பெறும் இத்திட்டம் படிப்படியாக சுயஉதவிக் குழுக்களு க்கான கடன், சிறு, குறு வணிகக்கடன் என பிற வகைக் கடன்களையும் இணைய வழியிலேயே விண்ணப்பித்துப் பெறுமளவிற்கு நடப்பாண்டிலேயே விரிவுபடுத்தப்படும்.

மகளிர் சுய உதவிக் குழுத் திட்டம் 1989-ஆம் ஆண்டு தருமபுரியில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டது. மேலும், தருமபுரி மாவட்டம், தொப்பூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டப் பயனாளிகளின் விண்ணப்பங்களைப் பதிவு செய்யும் முகாமினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 24.7.2023 அன்று தொடங்கி வைத்தார். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் 1908 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு 117 வருடங்களாக செயல்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

அதைத்தொடர்ந்து, இன்றைய தினம், தொடக்க வேளாண்மைக் கூட்டுற வுக் கடன் சங்கங்களில் விண்ணப்பித்த அன்றே பயிர்க்கடன் வழங்கும் புதிய திட்டத்தையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இங்கு தொடங்கி வைக்கப்பட்டது சிறப்புக்குரியது.

இந்த நிகழ்ச்சியில், பொதுப் பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே. ஆர்.பெரியகருப்பன், சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி, சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பி. வெங்கடேசன், கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, கூட்டுறவு சங்கங்களின் மாநில பதிவாளர்கள் நந்தகுமார், தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் ரெ.சதீஷ் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### 92வது பிறந்த நாள்: திராவிட இயக்கக் கொள்கைகளை

# அடுத்த தலைமுறைக்கு கொண்டுசேர்த்த முரசொலிமாறனின் பணிகளைப் போற்றுவோம்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!



சென்னை, ஆக. 19 - துணைமுதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன் அவர்களின் 92 வது பிறந்தநாளையொட்டி வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மனசாட்சியாக வாழ்ந்த மதிப்பிற்குரிய முரசொலி மாறன் அவர்களின் பிறந்த நாள் இன்று!**

**'முரசொலி' வளாகத்தில் உள்ள அவரது திருவுருவச்சிலைக்கும், அருகே வைக்கப்பட்ட திருவுருவப் படத்துக்கும் இன்று மரியாதை செலுத்தினோம்.**

**கலைஞர் அவர்களால் வார்த்தெடுக்கப்பட்டு, எழுத்து, பத்திரிகை, திரைத் துறை, அரசியல், அரசு நிர்வாகம்.. என அனைத்துத் துறைகளிலும் உயரங்களைத் தொட்டவர். மாநில சுயாட்சிக்காகவும் வளரும் நாடுகளின் உரிமைக்காகவும் குரல் கொடுத்தவர்.**

**திராவிட இயக்கக் கொள்கைகளை அடுத்த தலைமுறைக்கு கொண்டு சேர்த்த முரசொலி மாறன் அவர்களின் பணிகளைப் போற்றுவோம். அவர் புகழ் ஓங்கட்டும்!**

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### வேதாரண்யம் வட்டம் – தாணிக்கோட்டகத்தில் – ஓய்வு பெற்ற

# அரசுப் பள்ளி தலைமை ஆசிரியருக்கு பாராட்டு விழா!

## பெற்றோர் – ஆசிரியர் சங்கத் தலைவர் முரசொலி சிங்காரம் மாணவர்களுக்கு நிதி உதவி!

*சென்னை, ஆக. 19 - நாகை மாவட்டம் வேதாரண்யம் தாலுகா தாணிக்கோட்டகத்தில் அரசு மேல்நிலைப்பள்ளி உள்ளது. இங்கு தலைமை ஆசிரியராக பணியாற்றியவர் தமிழ்ச்செல்வன் 41 ஆண்டுகள் ஆசிரியராகவும், அதில் 23 ஆண்டுகள் தாணிக்கோட்டகம் அரசு மேல்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராகவும் பணியாற்றி உள்ளார். இவர் பணியாற்றிய அனைத்து பள்ளிகளிலும் நூறு சதவீத தேர்ச்சி கிடைக்க காரணமாக இருந்துள்ளார்.*

*இந்நிலையில் தமிழ் செல்வன் நேற்று முன்தினம் பணி ஓய்வு பெற்றார். அவரின் பணியை பாராட்டி மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் ஆசிரியர் கழகத்தினர் மற்றும் ஊர் மக்கள் ஒன்று கூடி பாராட்டு விழா நடத்தினர். பள்ளியில் நடந்த விழாவில் ஓய்வு பெற்ற தலைமையாசிரியர் தமிழ் செல்வனுக்கு எடைக்கு எடை (75 கிலோ) புதிய நாணயங்களை பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் தொழிலதிபர் முரசொலி சிங்காரம் வழங்கினார்.*

*விழாவிற்கு பின்னர் அவரை குதிரை பூட்டிய சாரட் வண்டியில் வீடு வரை அழைத்து சென்று மரியாதை செய்தனர். அப்போது பள்ளி மாணவர்கள், பெற்றோர். பொதுமக்கள் ஊர்வலமாக உடன் சென்றனர். ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியருக்கு ஊர்கூடி 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கோயில் திருவிழா போல் பாராட்டு விழா நடத்தியது அனைவரையும் வியப்படைய வைத்துள்ளது.*

*பள்ளி வளர்ச்சி நிதிக்கு ரூ.1 லட்சம் நன்கொடையை தமிழ்செல்வன் வழங்கினார் மேலும் பள்ளியில் நூறு சதவீத தேர்ச்சிக்கு பாடுபட்ட 19 ஆசிரியர்களுக்கு ரூ.55 ஆயிரம், உயர்கல்வி படிக்கும் மூன்று மாணவர்களுக்கு உதவித்தொகையாக ரூ.70 ஆயிரம் என ரூ. 1 லட்சத்து 65 ஆயிரத்தை முரசொலி சிங்காரம் தனது சொந்த செலவில் வழங்கினார். விழாவில் பள்ளி பொறுப்பு தலைமை ஆசிரியர் கார்த்திகேயன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.*




வேதாரண்யம் தாலுகா தரணிக் கொட்டகத்தில் ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் தமிழ்ச்செல்வனின் 41 ஆண்டு கால ஆசிரியப் பணியைப் பாராட்டி, பெற்றோர் – ஆசிரியர் சங்கத் தலைவர் தொழிலதிபர் முரசொலி சிங்காரம் எடைக்கு எடை நாணயம் வழங்கினார். அத்துடன் சிறந்த ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் ரூ.1.65 லட்சம் தொகையையும் அவர் வழங்கினார்.